**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**ஆசிரியர் பட்டயப் பயிற்சி (ஓராண்டு)**
***தாள் –3 தமிழில் படைப்பாற்றல் திறன் (TT03)***

**வினாத்தாள் – மூன்றாம் பருவம்**

| **நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)** |
|---|

**ஜுலை – ஆகஸ்ட் 2024**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3 இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. படைப்பாற்றல் என்பது யாது?
2. ஐம்புலன்கள் மூலம் செய்திகளை வெளிப்படுத்தும் திறனை எவ்வாறு அழைப்பர்.
3. வாசிக்கும் திறனை வளர்க்கும் போது எத்திறன் வளர்கிறது.
4. "உலகில் உள்ள நல்லவை அனைத்தையும் உள் வாங்க வேண்டும்" என்ற கருத்தை கூறியவர் யார்?
5. எம்மொழி வழியாக சிந்திக்கும் போது படைப்புதிறன் ஆற்றல் மிக்கதாகத் திகழும்.
6. நடத்தையிலும் அனுபவத்திலும் மாற்றத்தை ஏற்படுத்துவது எது?
7. இலக்கிய வகைகளில் முதலிடம் பெறுவது எது?

8. யாப்பிலக்கணத்திற்குக் கட்டுப்படாமல் கவிதை உணர்வுகளுக்கு சுதந்திரக்சூழலில் உருவானது எது?
9. ஒரு பொருள் பற்றிய கருத்துக்களைச் செறிவோடு விளக்கமான நடையில் எடுத்துரைப்பது யாது?
10. எம்மொழியில் படைப்பாற்றலை எளிதில் வளர்க்க முடியும்.
11. "ஊர்வலம்" என்னும் தலைப்பில் கவிதை எழுதியவர் யார்?
12. "சிறுதுளி பெருவெள்ளம்" என்று குறிப்பிடும் பழமொழி எதைக் குறிக்கிறது?
13. நன்னூல் குறிப்பிடும் நூலின் அழகுகள் எத்துணை?
14. "ஆத்திசூடி" என்னும் நூலை இயற்றியவர் யார்?
15. முழு வீச்சாகக் குழந்தைகளுக்காக மட்டுமே கவிதை எழுதியவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. மொழிப்பாடத்தில் அடிப்படை மொழி திறன்களின் பங்கினைப் பற்றி குறிப்பிடுக.
2. இசைத்திறன் பற்றி எழுதுக.
3. படைப்பாற்றலை ஊக்குவிக்கும் காரணிகள் யாவை?
4. வகுப்பறைச் சூழலில் படைப்பாற்றல் எவ்வாறு அமையும்?
5. படங்கள் மூலம் படைப்பாற்றல் திறனை எவ்வாறு வளர்ப்பாய்?
6. சிறுகதையின் இலக்கணம் குறித்து எழுதுக.
7. ஏதேனும் ஒரு அயல்நாட்டில் குழந்தை இலக்கியம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதைக் குறிப்பிடுக.
8. சாகித்திய அகாதெமி விருது குறித்து எழுதுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) மனித மனத்தின் கட்டமைப்புக் குறித்து ஜி. கார்டனர் கூறும் பிரிவுகளை விரிவாக எழுதுக.

(அல்லது)

(ஆ) படைப்பாற்றலை வளர்ப்பதில் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் பங்கு குறித்து கட்டுரை வரைக.

2. (அ) கவிதை என்றால் என்ன? கவிதை எழுத விழைவோர் கருத்தில் கொள்ள வேண்டவை குறித்து விரிவாக எழுதுக.

(அல்லது)

(ஆ) கட்டுரை என்பது குறித்து எழுதி, அதன் அமைப்பு மற்றும் வளர்ச்சி நிலைகள் குறித்து விளக்குக.

3. (அ) கற்பனை என்றால் என்ன? சூழலுக்கேற்ற கற்பனை வெளிப்பாட்டை எவ்வாறு வளர்க்கலாம் என்பதை எடுத்துக்காட்டுடன் விவரி?

(அல்லது)

(ஆ) உலகலாவிய படைப்புகள் ஆற்றும் தமிழ் தொண்டினைப் பற்றி விரிவாக விளக்கி வரைக.

***